ii) ஒவ்வொரு சுழற்சியிலும் போதுமான விண்ணப்பங்கள் தற்போது நடத்தப்பட்டு வரும் பாடப்பகுதிகளில் கிடைக்கப்பெறுமானால் அவற்றுக்குத் தகுந்தவாறு பாடப்பிரிவுகளில் இட ஒதுக்கீடு செய்யப்படும்.

iii) ஒவ்வொரு விண்ணப்பதாரரும் தனக்கு விருப்பமான பாடப்பிரிவுகளாகத் தான் விரும்பும் பாடத்தைக் (ஆங்கிலவழி அல்லது தமிழ்வழி வகுப்புகள் இருப்பின் அவற்றின் தேர்வும்) குறிப்பிடவேண்டும். தெளிவாகக் காட்டி அப்பாடப்பிரிவு முதலாவதாக/ இரண்டாவதாகத் தெரிவு செய்யப்படுகிறது என்றும் குறிப்பிட்டு மேற்கண்ட பாடப்பிரிவு முதலாம் சுழற்சி வகுப்பிலா அல்லது இரண்டாம் சுழற்சி வகுப்பிலா என்றும் தவறாமல் குறிப்பிடவேண்டும்.

iv) கலந்தாய்வு முறையில் (Counselling method) மாணவ, மாணவியர் சேர்க்கை நடைபெறும்.

அரசினர் கலைக் கல்லூரி (தன்னாட்சி) முதல்வர்
கும்பகோணம் – 612 001.
2014

ஸ்ரீ சீதா, பிரிண்டர்ஸ் குடந்தை. 0435 – 2420583

# அரசினர் கலைக் கல்லூரி

தன்னாட்சி
கும்பகோணம் - 612 002
(NAAC - ன் அறிந்தேற்பு பெற்றது)
Phone : (0435) 2442149, Fax: 2442977
College website : www.gacakmu.in

160 ஆம் ஆண்டு

## சேர்க்கைக்கான தகவல் தொகுப்பு 2014 - 2015



**தென் இந்தியாவின் கேம்பிரிட்ஜ்** என அழைக்கப்படும் கும்பகோணம் அரசினர் தன்னாட்சி கலைக் கல்லூரியில், பயில விரும்பி விண்ணப்பிக்க உள்ள உங்களது வாழ்வு சிறக்க இக்கல்லூரி முழுமையாகப் பயன்படும் என உறுதியுடன் நம்புகிறோம்.

1. கோடை விடுமுறைக்குப்பின் 18.06.2014 அன்று கல்லூரி மீண்டும் திறக்கப்படும்.

**பட்ட வகுப்புகளில் சேரத்தகுதி :** H.S.C. அல்லது பாரதிதாசன் பல்கலைக் கழகத்தால் அதற்குச் சமமானது என்று அறிவிக்கப்பட்ட வகுப்பில் தேர்ச்சிபெற்று இருக்க வேண்டும். 15.07.2014 அன்று பதினாறரை (16½) வயது நிரம்பியவராகவும், 01.07.2014 அன்று 21 வயதுக்கு மிகாதவராகவும் இருத்தல் வேண்டும்.

இளநிலை வகுப்புகளில் 30% க்கு மிகாமல் மாணவியர் சேர்த்துக் கொள்ளப்படுவர்.

**இட ஒதுக்கீடு**

அரசு விதிகளின்படி இட ஒதுக்கீடு பின்வருமாறு அமையும்.

| | |
|---|---|
| பிற்பட்ட வகுப்பு (BC) | 30% |
| உள் ஒதுக்கீடு : | |
| இஸ்லாமியர் | 3.5% |
| மிகப்பிற்பட்ட வகுப்பு (MBC / DNC) | 20% |
| பட்டியல் இனத்தவர் (SC) | 18% |
| (உள்ஒதுக்கீடு) அருந்ததியர் | 3% |
| பழங்குடி இனத்தவர் (ST) | 1% |
| பகிரங்கப் போட்டி (OC) | 31% |

2. (அ) சேர்க்கை விண்ணப்பம் ஒளி நகலில் (Xerox Copy) இருந்தால் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.

(ஆ) ஒருவருக்கு ஒரு விண்ணப்பம் மட்டுமே வழங்கப்படும்.

**(இ) கற்பிக்கப்படும் பாடப்பிரிவுகள்**

**B.A., / B.Sc., / B.Com., / B.C.A.**

பகுதி: I தமிழ்
II ஆங்கிலம்

1. **முதல் சுழற்சி (Shift - I)**

காலை 9.00 மணி முதல் பிற்பகல் 1.20 மணி முடிய



பொதுவாக இக்கல்லூரியில் பயிலும் மாணவர்களுக்கு பல்வேறு விதமான உதவித்தொகைகள் வழங்கப்படுகின்றன.

12. விண்ணப்பத்துடன் இணைக்கப்பெறும் அஞ்சல் அட்டையில் விண்ணப்பம் பெற்றுக்கொண்டதற்கான கல்லூரி அலுவலக முத்திரையும், வரிசை எண் ஒன்றும் குறித்து அனுப்பப்படும். கல்லூரியோடு நீங்கள் கொள்ளும் கடித தொடர்புகளில் இந்த எண் குறிக்கப்பெற வேண்டும்.

**குறிப்பு:** சேர்க்கை குறித்து புகார்கள் எதுவும் இருப்பின் முதல்வரிடமும் முதல்வர் வழியாக மண்டலக் கல்லூரிக் கல்வி இணை இயக்குனர், திருச்சி அவர்களுக்கும் தெரிவிக்கலாம்.

13. தவறான சான்றிதழ்கள் மற்றும் தகவல்களின் அடிப்படையில் கல்லூரியில் சேர்வோர் கல்லூரியை விட்டு நீக்கப்படுவதுடன் தக்க குற்றவியல் நடவடிக்கைக்கும் உள்ளாவர் என எச்சரிக்கப் படுகின்றனர்.

14. பட்டியல் இனத்தவர் மற்றும் பழங்குடி வகுப்பினருக்கு விண்ணப்பக்கட்டணம், பதிவுக்கட்டணம், கல்விக்கட்டணம் கிடையாது.

15. மாணவ, மாணவியர் கல்லூரிக்கு கண்ணியமான உடை உடுத்தி வருதல் வேண்டும்.

16. **கூடுதல் தகவல்**

i) **முதலாவது சுழற்சிக்காலம் :** காலை 9.00 மணி முதல் மதியம் 1.20 மணி வரை.

**Shift - I Time Duration : 9.00 a.m to 1.20 p.m.**

**இரண்டாவது சுழற்சிக் காலம் :** மதியம் 1.30 மணி முதல் மாலை 6.20 வரை

**Shift - II 1-30 p.m. to 6.20 p.m.**

13. மூலச்சான்றிதழ்கள் கல்லூரியில் கொடுப்பதற்கு முன்பே தேவையான உண்மைப்படிகளை எடுத்துக்கொள்ளுமாறு அறிவுறுத்தப் படுகின்றனர்.

மேலும் மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்திலும் முன்னதாக பதிவு செய்துகொள்ளலாம். கட்டணம் செலுத்தி இக்கல்லூரியில் சேர்ந்தோர், பின்னர் விலகினால் எக்காரணத்தை முன்னிட்டும் இக்கல்லூரியில் செலுத்திய பணம் திருப்பித்தரப்படமாட்டாது.

**14. விடுதிகள், உதவித்தொகை முதலியன**

அரசாங்கத்தால் நடத்தப்படும் பிற்பட்டோர், தாழ்த்தப்பட்டோர் நலத்துறைகளைச் சேர்ந்த மாணவர் விடுதிகள் கும்பகோணத்தில் உள்ளது. மாணவர் அந்த விடுதியில் சேர விருப்பமுடையவரானால் விடுதி நிர்வாகிகளுக்கு தனியே விண்ணப்பிக்கவேண்டும்.

**(அ) கல்லூரி ஆண்கள் விடுதி :** கல்லூரியின் விக்டோரியா ஜுப்லி விடுதி பழுதடைந்துள்ளதால் இவ்வாண்டு செயல்படாது.

**(ஆ) கல்லூரி மகளிர் விடுதி :** கல்லூரியுடன் இணைந்த மகளிர் விடுதியில் 54 மாணவிகள் சேர்க்கப்படுவர். தொலைத்தூரத்தில் இருந்து வரும் மாணவிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

இக்கல்லூரியில் பயிலும் மாணவர்களில் முன்னாள் இராணுவத்தினர் அல்லது அவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களுக்கு உதவித்தொகை வழங்கப்படும். மேலும் விபரம் வேண்டுவோர் சம்பந்தப்பட்ட மாவட்ட முன்னாள் இராணுவ வீரர் நலக்குழுவை (District Soldier / Airmans Board) அணுகவும்.

இக்கல்லூரியில் சேரும் மாணவர்கள் +2 வகுப்பில் 60% மற்றும் அதற்கு மேலும் மதிப்பெண் பெற்று ஒரே தடவையில் தேர்ச்சி பெற்றுள்ள ஆதி திராவிட மாணவர்களுக்கு இடைக்கால கல்வித் தகுதி பரிசுத்தொகை பெறுவதற்கான விண்ணப்பத்தினை அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.



| பட்டப்படிப்பு : | | மாணவர் சேர்ப்பு எண்ணிக்கை | |
|---|---|---|---|
| முதன்மைப் பாடங்கள் | துணைப் பாடங்கள் | த. வழி | ஆ. வழி |
| 1. B.A.தமிழ் இலக்கியம் | தமிழக வரலாறும் பண்பாடும்<br>தமிழ் இலக்கிய வரலாறு | 30 | - |
| 2. B.A.ஆங்கில இலக்கியம் | இங்கிலாந்தின் சமூக வரலாறு<br>இந்திய ஐரோப்பிய காப்பியங்கள் (மொழிப் பெயர்ப்பியல்) | - | 30 |
| 3. B.A. இந்தியப்பண்பாடு மற்றும் சுற்றுலாவியல் | தமிழக வரலாறு 1967 வரை அளவையியலும்.<br>அறிவியல் முறைகளும் | - | 30 |
| 4. B.A.பொருளியல் | புள்ளியியல் / வணிகவியல் | 40 | 40 |
| 5. B.Sc., கணிதம் | கணிதப்புள்ளியியல் / இயற்பியல் | 25 | 25 |
| 6. B.Sc., இயற்பியல் | கணிதம் / வேதியியல் | 25 | 25 |
| 7. B.Sc.வேதியியல் | கணிதம் / இயற்பியல் (அல்லது)<br>இயற்பியல் / விலங்கியல் | 25 | 25 |
| 8. B.Sc.விலங்கியல் | வேதியியல் / தாவரவியல் | 20 | 20 |
| 9. B.Sc.புவியியல் | புள்ளியியல் / சுற்றுலாவியல் | 25 | 25 |
| 10.B.Com., வணிகவியல் | புள்ளியியல் / பொருளியல் / வணிக மேலாண்மை | - | 40 |
| 11.B.Sc. Plant Biology and plant Techonology | | - | 25 |
| 12.B.C.A., | | - | 40 |

### 3. பட்ட மேற்படிப்பு : முதுநிலை முதல் சுழற்சி

| | | | |
|---|---|---|---|
| M.Sc., பிரிவு I | கணிதம் (ஆங்கில வழிஇரண்டு சுழற்சி) | | 25 |
| M.Sc., பிரிவு III | இயற்பியல் | ” | 20 |
| M.Sc., பிரிவு IV | வேதியியல் | ” | 20 |
| M.Sc., பிரிவு V | விலங்கியல் | ” | 20 |
| M.Sc., பிரிவு VI | புவியியல் | ” | 20 |
| M.A., பிரிவு III | பொருளியல் | ” | 25 |
| M.A., பிரிவு VII | ஆங்கிலம் | ” | 25 |
| M.A., பிரிவு VII | தமிழ் | | 35 |
| M.C.A., பிரிவு IX | கணிப்பொறியியல் | ” | 20 |

### 4. பட்ட மேற்படிப்பு : முதுநிலை (இரண்டாம் சுழற்சி)

| | | |
|---|---|---|
| M.Sc., கணிதம் | – | 25 |
| M.Sc., உயிர் வேதியியல் (Bio Chemistry) | – | 25 |
| M.Sc., கணினி அறிவியல் | – | 25 |
| M.A., வரலாறு | – | 25 |
| M.A., இந்தியப் பண்பாடு மற்றும் சுற்றுலாவியல் | – | 20 |
| M.Com., | – | 30 |

## M.C.A. வகுப்பிற்கு சேர்க்கை

இதற்கான நுழைவுத்தேர்வு மற்றும் சேர்க்கை தமிழக அரசினால் நடத்தப்பெறும் நுழைவுத் தேர்வு மூலம் ஒற்றைச் சாளர முறையில் நடைபெறும். மேற்கொண்டு தகவல்களை செய்தித்தாள்களின் மூலமும் மற்றும் கல்லூரி அறிவிப்புப் பலகையிலும் பார்த்து தெரிந்து கொள்ளலாம்.

### 5. எம் ஃ பில் முழுநேர வகுப்புகள் மற்றும் பகுதி நேர வகுப்புகள் அடியிற்குறிப்பிட்டபடி இக்கல்லூரியில் கற்பிக்கப்படுகின்றது.

**முழுநேர வகுப்புகள் :**

தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், வேதியியல், விலங்கியல், பொருளியல், புவியியல். வணிகவியல்

**பகுதிநேர வகுப்புகள் :**

ஆங்கிலம்,வேதியியல், விலங்கியல், புவியியல்

### 6. முழு நேர/பகுதி நேர முனைவர் பட்டப்படிப்பு அடியிற் குறிப்பிட்டபடி

தமிழ், ஆங்கிலம், கணிதம், இயற்பியல், விலங்கியல், பொருளியல், புவியியல், வணிகவியல், உயிர்வேதியியல், பாடப்பிரிவுகளில் கற்பிக்கப்படுகிறது.

## 7. விண்ணப்பப் படிவங்கள் பெறுதல்

விண்ணப்பப் படிவங்கள் மற்றும் தகவல் தொகுப்பினை +2 தேர்வு வெளியான மறுநாள் முதல் கல்லூரி வேலை நாட்களில் 10.30 மணியிலிருந்து மாலை 2.30 மணி வரை பட்ட வகுப்பிற்கும், பாரதிதாசன் பல்கலைக்கழக இளநிலை தேர்வு முடிவுகள் வெளியான பிறகு பட்ட மேல் வகுப்பிற்கு கீழே கண்டுள்ள தொகையை அலுவலகத்தில் செலுத்தி நேரில் பெற்றுக் கொள்ளலாம்.

| **விண்ணப்பத்தின் விலை** | (பதிவுக்கட்டணம் ரூ. 2. உள்பட) |
|---|---|
| எம்.ஏ. & எம்.எஸ்ஸி. | ரூ. 42.00 |
| பி.ஏ / பி.எஸ்ஸி. / பி.காம் /பி.பி.ஏ., | ரூ. 27.00 |

விண்ணப்பப் படிவ விலை பணவிடையாகவோ அல்லது அஞ்சல் தலையாகவோ பெற்றுக் கொள்ளப்பட மாட்டாது.

## 8. விண்ணப்பிக்கும் முறை

1. விண்ணப்பப் படிவத்தை தெளிவாகவும், பிழையின்றியும் நிறைவு செய்து விண்ணப்பிப்பவருடன் அவரது பெற்றோர் அல்லது காப்பாளரும் கையெழுத்திடல் வேண்டும். சுய முகவரி இட்ட அஞ்சல் அட்டை இணைக்க வேண்டும்.
2. விண்ணப்பதாரர் எந்த சுழற்சியைத் (Shift) தெரிவு செய்கிறார் என்று தெளிவாகக் குறிப்பிடல் வேண்டும்.

தவறாக பூர்த்தி செய்யப்பட்ட மற்றும் முழுவதுமாக பூர்த்தி செய்யப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும். படிக்க விரும்பும் பயிற்று மொழி (ஆங்கிலம்/தமிழ்) தெளிவாக குறிக்கப்படல் வேண்டும். விண்ணப்ப படிவத்தில் தாங்கள் தெரிவு செய்யும் முதன்மைப்பாடம் மற்றும் பயிற்று மொழியை விருப்ப அடிப்படையில் 1-ம், 2-ம், 3-ம், 4-ஆம் இடங்களில் குறிப்பிட வேண்டும். பயிற்று மொழி குறிப்பிடப்படாத விண்ணப்பங்கள் தமிழ் வழியில் சேர்க்கப்படும்.

| | |
|---|---|
| **பட்ட மேற்படிப்பு வகுப்புகளுக்கு விண்ணப்பிக்க கடைசி நாள்** | B.A., B.Sc., **பாரதிதாசன் தேர்வு முடிவுகள் வெளிவந்த 10 – வது நாள்** |

**குறிப்பு:** கணினி பயிற்சித்திட்டம் (Computer Literacy Programme): அரசு கல்லூரிகளில் மாணவர்களுக்கு அளிக்கப்படும் கணினிப்பயிற்சி தமிழக அரசால் அங்கீகரிக்கப்பட்டு மாவட்ட வேலை வாய்ப்பு அலுவலகத்தில் உரிய தொழில் பிரிவில் வேலை வாய்ப்புக்காக பதிவு செய்து கொள்ள இயலும்.

**கட்டணம் ரூ.700/-**

9. முதுகலை மாணவர்கள் விண்ணப்பத்தின் இரண்டாம் பக்கத்திலுள்ள கணினி குறியீட்டுத்தாளை (COMPUTER CODING SHEET) தவறாது சரியாகப் பூர்த்தி செய்ய வேண்டும். தேவையற்ற கட்டங்களில் X குறியிட வேண்டும். இப்பக்கத்தில் அனைத்துப் பதிவுகளும் ஆங்கிலத் தனி (CAPITAL) எழுத்துக்களில் தெளிவாக எழுதப்பட வேண்டும்.

10. மாணவர் சேர்க்கையின் போது சமர்ப்பிக்கப்படும் +2 மதிப்பெண் சான்றிதழின் அடிப்படையில்தான் மாணவர் சேர்த்துக் கொள்ளப்படுவர். மதிப்பெண் சான்றிதழ் ஒன்றுக்கு ரூ. 50.00 வீதம் சரிபார்ப்பு கட்டணம் வசூலிக்கப்படும். சேர்க்கைக்குபின் மதிப்பெண் சான்றிதழ் தேர்வுக் கட்டுப்பாட்டு வாரியத்தால் சரிபார்க்கப்படும். அதில் ஏதேனும் தவறு கண்டுபிடிக்கப்பட்டால் அன்னாரது சேர்க்கை உடனடியாக ரத்து செய்யப்படுமென்பதுடன், குற்றப்பிரிவின் கீழ் சட்டபூர்வமான நடவடிக்கையும் எடுக்கப்படும்.

**11. கலந்தாய்வும் சேர்க்கையும்**

விண்ணப்பித்த தகுதியுள்ள விண்ணப்பதாரர்கள் கலந்தாய்விற்கு அழைக்கப்படுவர். அவர்கள் தங்கள் பெற்றோர் / காப்பாளர் உடன் கீழ்க்கண்ட மூலச் சான்றிதழ்களைத் தவறாமல் கொண்டு வரவேண்டும்.

I) மாற்றுச் சான்றிதழ்
II) நடத்தைச் சான்றிதழ்
III) மதிப்பெண் பட்டியல் மற்றும் ஒளி நகல் – 2
IV) அடையாள அட்டையில் ஒட்டுவதற்கு அண்மையில் எடுக்கப்பட்ட ஸ்டாம்பு அளவுள்ள வண்ணப் புகைப்படம் மூன்று.
V) சாதிச் சான்றிதழ் (பிற்பட்ட, மிகவும் பிற்பட்ட, பட்டியல் இன / பழங்குடி வகுப்பினருக்கு மட்டும்) மற்றும் ஒளி நகல் – 1
VI) மாற்று திறனாளிக்கான சான்றிதழ்.
VII) விளையாட்டு, N.S.S., சிறப்புத் தகுதிச் சான்றிதழ்.
VIII) முன்னாள் இராணுவத்தினருக்கான சான்றிதழ்

கலந்தாய்விற்கு அழைக்கப்படும் மாணவர்கள் பெயர் பட்டியல் கல்லூரியின் இணையதளம், அறிவிப்புப் பலகையில் வெளியிடப்படும். அஞ்சல் மூலம் அனுப்பப்படும் கடிதங்களின் காலதாமதத்திற்கும் கடிதம் கிடைக்கப்பெறாமைக்கும் நிர்வாகம் பொறுப்பல்ல.



கலந்தாய்வில் தேர்ந்தெடுக்கப்படின் குறிப்பிட்ட கட்டணங்களை உடனே செலுத்துவதற்கு தயாராக வரவேண்டும். மூலச் சான்றிதழ்களை கொடுப்பதற்கோ கட்டணங்களைச் செலுத்துவதற்கோ கால நீட்டிப்பு அளிக்கப்படமாட்டாது. குறிப்பிட்ட நேரத்தில் கலந்தாய்விற்கு வராவிட்டாலும், மூலச் சான்றிதழ்கள் இல்லாவிடினும், கட்டணங்களை உடனே செலுத்தாவிடினும் சேர்க்கை நிராகரிக்கப்படும். எக்காரணம் கொண்டும் மீண்டும் கலந்தாய்விற்கு அனுமதிக்கப்படமாட்டாது என்று அறிவிக்கப்படுகிறது.

***உதவித் தொகை பெறும் மாணவர்கள் கண்டிப்பாக 75% வருகைப் பதிவு பெற்றிருத்தல் வேண்டும். மற்ற விவரங்களைக் கல்லூரியில் சேர்ந்தபின் கல்லூரிக் கையேட்டில் காண்க.***

**12. பட்ட மேற்படிப்புக்கு விண்ணப்பிப்போருக்கு மட்டும் :–**

**குறிப்பு:** பாரதிதாசன் பல்கலைக் கழகத்தைச் சேராத வேறு பல்கலைக் கழக இனத்தில் பயின்ற மாணவர்கள் தாங்கள் தேறிய தேர்வுகளை ஏற்றுக் கொள்வதற்காக பாரதிதாசன் பல்கலைக் கழகப் பதிவாளருக்கு ரூபாய். 100/- செலுத்தி விண்ணப்பிக்க வேண்டும். இம்மாணவர்கள் விண்ணப்பத்துடன் பட்ட வகுப்பு தேறியதற்கான தற்காலிக சான்றிதழ் (PROVISIONAL CERTIFICATE) முன் பயின்றதற்கான படிப்புச் சான்றிதழ் (COURSE CERTIFICATE) ஆகிய இரண்டையும் இணைக்க வேண்டும்.